RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1323

OPEN ACCESS

# திருக்குறளில் அகத்திணைக் கூறுகள்

செ. லீ. ஹெலன் ஜெபா றோஸ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பல்கலைக் கழகக் கல்லூரி, பாளையம், திருவனந்தபுரம்- 695034, கேரளா, இந்தியா

# The Agathinai Components in Thirukkural

S.L. Helen Japa Rose [a, *]

[a] Department of Tamil, University College, Palayam, Thiruvananthapuram, Kerala-695034, India

* Corresponding Author: helenjapani@gmail.com

Received: 31-05-2022
Revised: 18-09-2022
Accepted: 25-09-2022
Published: 21-11-2022

**ABSTRACT**

Based on the lives of the Sangam people, they created literature by distinguishing between love-genre literature and heroic-genre literature. The ambrosial Thirukkural, written by the world-famous Valluvar, is a universal holy verse and is a beacon to guide life and refresh literature that gives new meaning every time it is read. It is a book about life. Thirukkural is said to be suitable for all religions, all nations, and all times. In this book, Valluvar clearly explains the principles of the individual's life and how a mature man should be. Agam is a love feeling related to people's inner selves. Thinai is a discipline. So, love is an emotional discipline that can be called Agam. Kamathuppal (Love) is the third section of Thirukkural. This outlines the merits of the love-genre tradition. It has a literary flavour to it, and love reflects the lively character of chastity. It is Valluvar's 'Kamathuppal' that leads to the highest way of life, one-to-one. In this, the expression of love, commitment, and emotional values of the lovers are seen deliciously. Also, the characteristics, duties, and rights common to both sexes are explained. The agathinai components express love and pleasure. He has laid the foundation of love life in twenty-five chapters, divided into two parts: illicit courtship and chastity, which is the agam life. Ancient Tamils considered virtue as a way of life. If one lives a life of charity, one will get happiness. That pleasure is permanent. This article examines the agam components of domesticity as a virtue.

**Keywords:** Sangam Literature, Thirukkural, Thiru Valluvar, Principles of The Individual

## முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் தலைசிறந்து விளங்கும் திருக்குறளில், தொல்காப்பியத்துள் வரும் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் என்ற அகப்பொருள் நெறிமுறைகள் விரிவாகக் கூறப்படாவிடினும் இவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் திருவள்ளுவர். இவர் 'தகையணங்குறுத்தல்' தொடங்கி 'ஊடல் உவகை' ஈறாக இருபத்து ஐந்து அதிகாரங்களில் அகப்பொருள் நெறியாகிய புலனெறி வழக்க மரபை, தலைமகனும் தலைமகளும் உளம் ஒத்து வாழ்கின்ற வாழ்க்கையின் பல்வேறு கூறுகளைக் காமத்துப்பாலில் இனம் கண்டுகொள்ள முடிகிறது. சங்கத்தொகை கற்பு வாழ்க்கையான அகப்பொருள் கூறுகள் திருக்குறளில் களவியல் - கற்பியல் இவற்றில் இன்பம் துய்க்கும் நாடகப்பாங்கில் அமைந்துள்ள விதத்தை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## உளம் ஒத்து இணைதல்

தலைவியின் அழகில் வியந்து பலவாறு அவளைப் போற்றுகிறான் தலைவன். அவளது கண்ணைப் பார்த்துக் குறிப்புகள் மூலம் இணைய முயலுகிறான். இருவர் நோக்கமும் ஒத்து ஒன்று கூடச் செய்துவிடுகிறது. இதனை,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல்"

என்ற குறளில் இருவரும் ஈருடல் ஓருயிராய் மாறி இன்பம் துய்த்தமையைக் கண்டுகொள்ள முடிகிறது (Balasubramanian, 2019).

தலைமகன் தலைமகள் இவர்களின் நெருக்கமான உறவை மிக நயமாக எடுத்துரைத்துள்ளார் வள்ளுவர்,

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை

போழப் படாஅ முயக்கு"

இதில், காற்றும் புக முடியாதபடி இடைவெளியின்றி இறுக்கமாக இருப்பது ஒருவரை ஒருவர் உயிரினும் மேலாய் விரும்பி இன்பம் அனுபவிப்பதைப் புலப்படுத்துகிறது (Balasubramanian, 2019).

## தலைவனின் உள்ளக் களிப்பு

கண்ணுக்கின்பம் காட்சி, செவிக்கின்பம் இசை, வாய்க்கின்பம் சுவை, மூக்கிற்கின்பம் மணம், உடலுக்கின்பம் தொடுதலால் ஏற்படும் மென்மை இவ் ஐம்புல இன்பங்களும் கொடுப்பவளாய் தலைவி அமைந்துள்ளாள் என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான் தலைவன். இதனை,

"கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்ணே உள"

இதில், தலைவியிடம் கூடும் போது உருவாகும் இன்ப உணர்வு புலப்படுகிறது (Balasubramanian, 2019). மேலும் தலைவியின் முகத்தை முழுமதியுடன் ஒப்பிட்டு மதிக்கில்லாப் பெருமை அவளிடம் உண்டு என்று பேசுவதை,

"மதியும் மடந்தை முகனும் அறியா

பதியிற் கலங்கிய மீன்"

எனவும், தலைவி அனிச்சப் பூவினும் மிகவும் மென்மையுடையவள் என்பதை,

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்

மென்னீரள் யாம்வீழ் பவள்"

என்னும் குறள்களைக் கவனிக்கும் போது இயற்கைப் பொருள்களோடு தலைவியை ஒப்பிட்டு, அவள் அழகினைச் சிறப்பித்துப் பேசுவது தலைவனின் உள்ளத்து உணர்வைக் காட்டுவதாக உள்ளது (Balasubramanian, 2019).

## தலைவியின் உறுப்புக்களை உவப்புடன் பேசுதல்

நலம் புனைந்துரைத்தல் அதிகாரத்தில் தலைவியின் பொதுவான மென்மை பண்புகளை எடுத்தியம்பியபின் அவளது அழகிய மேனி, முத்து போன்ற வெண்பல், இயல்பாக அவளிடம் உள்ள நறுமணம், மைதீட்டியக் கண்கள், ஒளி பொருந்திய முகம் போன்ற பல்வேறு பொருட்களுடன் ஒப்பிட்டுப் பேசும் பாங்கு சிறப்புற அமைந்துள்ளமையைக் காணலாம். இதனை,

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்

வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு"

என்ற குறள் தலைவனின் உள்ளுணர்வுகளை எடுத்துக்காட்டுகின்றது (Balasubramanian, 2019).

## அன்பு வெளிப்பாடு

காதலன் - காதலியரின் அன்பு ஒருவரை ஒருவர் கருதும் விதத்தில் உள்ளமை பார்க்க முடிகிறது. மிக மென்மையான அனிச்சப்பூவும், அன்னப் பறவையின் உட்சிறகும் தலைவியின் பாதத்தில் பட்டால் நெருஞ்சி முள் படும் வலியால் துன்புறுவாள். இப்பேற்பட்ட வலியைக் கூட அவளால் தாங்க முடியாது என்று தலைவன் கூறுவதிலிருந்து அவனது உண்மையான அன்பின் வெளிப்பாட்டை உணர முடிகிறது. தலைவியின் அன்பை,

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பாக்கு அறிந்து"

"நெஞ்சத்தார் காதல வராக வெய்துண்டல்

அஞ்சுதும் வேபாக்கு அறிந்து"

காதற் சிறப்புரைத்தல் அதிகாரத்தில் தலைவி, கண்ணுக்கு மை எழுதினால் அவர் கண்ணை விட்டு மறைய நேரும் எனவும், சூடான பொருளை உண்டால் நெஞ்சத்தில் இருக்கும் காதலனைச் சுட்டுவிட வாய்ப்பு உள்ளதாகவும் கூறுவதிலிருந்து அவள் தலைவனை உயிரினும் மேலாக நேசிக்கின்ற இயல்புடையவளாய் இருப்பதைக் குறளால் உணரலாம் (Balasubramanian, 2019).

## மடலேறத் துணிதல்

மடல் என்பது அகத்திணையியல் களவிற்குரிய துறைகளுள் ஒன்று. "பெண்ணொருத்தியை விரும்பிய ஒருவன், அவளை அடைய, கையில் அப்பெண்ணின் உருவப்படம் வரைந்த துணியொன்றைப் பிடித்துக் கொண்டு, பனங்கருக்கால் செய்து ஒப்பனை செய்யப்பட்ட குதிரை ஒன்றில் ஏறித் தெருவழியே சான்றோர் பலரறிய வருதலை 'மடலேறுதல்' என்பர் (Mohanaraasu, 1986).

மறைவில் காதலர் கூடும் செய்தி உலகறியும் போது அவர்கள் சந்திக்கும் வாய்ப்பு அரிதாகி தலைவி தன் இல்லறத்திலேயே கட்டுப்பட்டு விடுகிறாள். அப்போது அவன் நாணத்தை விட்டு தன் காதலை வெளிப்படுத்த மடலேறத் துணிகிறான். இதனை வள்ளுவர்,

"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்

மடலல்லது இல்லை வலி"

"நோனா உடம்பும் உயிரும் மடலேறும்

நாணினை நீக்கி நிறுத்து"

என்பதிலிருந்து தலைவன் காம உணர்வால் உண்டாகும் துன்பத்தைப் போக்க மடலேற முயலும் தன்மை வெளிப்படுகிறது (Namakkal Kavignar, 2002).

தொல்காப்பியர் காலத்தில் ஒருத்திக்கு ஒருவன் என்னும் வரையறை இருந்த அளவிற்கு ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வரையறை அமையவில்லை. பல பெண்டிர் மணம், பரத்தையர் நாட்டம் ஆகியன சமுதாய ஏற்புக்குரியனவாகவே தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. இதற்கு மாறாக, ஒருவனுக்கு ஒருத்தி தான் என்னும் கோட்பாட்டை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

## பிரிவு நிலை

இல்லறவாழ்வில் இணை பிரியாது வாழ்ந்த காதலர் சிலகாலம் பிரிய வாய்ப்பு ஏற்படுகிறது. தலைவனின் பிரிவை அவனது பேச்சு, செயல்களிலிருந்து தலைவி உணருகிறாள். திருக்குறளில் பொருள் (குறள். 1230), பகை (குறள். 1268), புகழ் (குறள். 1263) என்ற காரணங்களால் தலைவன் பிரிந்தது பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால் தொல்காப்பியத்தில் ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தை காரணமாகப் பிரிவு நிகழ்ந்துள்ளமையும், இப்பிரிவுக்கு உகந்தோர் குறித்தும், அவற்றிக்குரிய காலவரையறைகளும் கண்டு கொள்ளமுடிகின்றன. சான்றாக,

"ஓதல் பகையே தூது இவை பிரிவே"

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"

"வேண்டி கல்வி யாண்டு மூன்று இறவாது"

என்ற தொல்காப்பியர் நூற்பாவிலிருந்து பிரிவு நிலை உணர முடிகிறது (Subramaniyan, 2013).

## தலைவியின் துன்ப வெளிப்பாடு

தனிமை என்ற துயரம் தலைவியை வாட்டுகிறது. அவள் அதை மறைக்க முயன்றும் வெளிப்படுகிறது. வள்ளுவர்,

"மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு

ஊற்றுநீர் போல மிகும்"

என்று சுட்டுவதிலிருந்து, ஊற்று நீர் இறைக்க இறைக்க ஊறுவது போல, காம நோய் மறைக்க மறைக்க வெளிப்படுகிறது எனத் தனிமையின் துயரை நிறுவியுள்ளார் (Namakkal Kavignar, 2002).

"மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா

என்னல்லது இல்லை துணை"

என்ற குறளில், எல்லா உயிர்களும் இரவில் தூங்கியும், தலைவி மட்டும் தூங்க முடியாமல் இரவுக்குத் துணையாகக் கவலையுடன் இருக்கிறார் என்பதிலிருந்து தலைவி இரவுக்கு இரங்கிப் பேசுவதைக் காண முடிகிறது (Namakkal Kavignar, 2002).

## முடிவுரை

அன்பின் ஐந்திணையைக் கருவாகக் கொண்டு காமத்துப்பால் அமைந்துள்ளது. களவுக் காலத்தில் மெய்யுணர்ச்சி நிகழும் என்பதைத் தொல்காப்பியம் சுட்டியுள்ளதைப் போன்று குறளும் எடுத்தியம்புகின்றது. ஒருத்திக்கு ஒருவன் போல ஒருவனுக்கு ஒருத்தி என்ற வள்ளுவர் கருத்து தொல்காப்பியத்துக்கு மாறாக உள்ளது. தலைவனின் பிரிவைப் பார்க்கும் போது, பரத்தையர் பிரிவைக் குறளில் பார்க்கமுடியவில்லை. ஆனால் தொல்காப்பியத்தில் பரத்தையர் பிரிவு இடம்பெற்றுள்ளது. திருக்குறளில் காதல் தூய்மை நிலையை உணரமுடிகிறது. அகப்பாடல்கள் ஐந்திணை அடிப்படையில் முதற்பொருள், கருப்பொருள் இவற்றின் பின்னணியில் தலைவன் தலைவியை முதன்மையாக வைத்து தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர், ஊரார், பாணன், விறலி போன்றோர் கூற்றாகக் கவிதைகள் ஆக்கிப் படைப்பது ஒரு கவியின் பண்பாகும். ஆனால் வள்ளுவரின் காமத்துப்பாலில் இப்பேற்பட்ட அமைப்பை வெளிப்படையாகக் காணமுடியவில்லை.

## References

Balasubramanian, K.V. (2019) Tholkappiyam, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Mohanaraasu, K. (1986) Tholkappiyamum, Thirukkuralum, Madras University, Chennai, India.

Namakkal Kavignar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V. (2013) Tholkappiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License